## Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **STC . 150/2024** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : போதராஜ் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : **ராஜாமணி** | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Respondent present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.10.2024

---

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் மனுதாராவேன், எனது முதல்விசாரணையை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 06.02.2024 ம் தேதியிட்ட வங்கியால் திருப்பப்பட்ட காசோலை அசல் **ம.சா.ஆ1** ஆகும், 14.02.2024ம் தேதியிட்ட திருப்பப்பட்ட காசோலைக்கு வங்கியால் வழலுங்கப்பட்ட குறிப்பு சலான் அசல் **ம.சா.ஆ 2** ஆகும், 26.02.2024ம் தேதியிட்ட மனுதாரர் எதிரிக்கு அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது அசல் **ம.சா.ஆ 3** ஆகும், அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **ம.சா.ஆ 4** ஆகும், 29.02.2024 ம் தேதியிட்ட எதிரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **ம.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

எனது புகார் மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்து நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் எத்தனை வருடம் வரவு செலவு உள்ளது என்றால் வரவு செலவு இல்லை 2007 ம் ஆண்டு முதல் பழக்கமுள்ளது. வழக்கு தாக்கல் செய்யும் வரை என்னிடம் முறையாக தான் நடந்து கொண்டாரா என்றால் சரிதான். என் மீது உத்தப்பநாயக்கனூர், உசிலம்பட்டி நகர், உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையங்களில் கந்து வட்டி சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல வழக்கு எதுவுமில்லை. எனது புகாரில் கூறிய சங்கதிகள் அனைத்து உண்மையா என்றால் உண்மைதான். நான் தற்போது என்ன தொழில் செய்து

வருகிறேன் என்றால் ஓய்வூதியம் 60,000/- மட்டும் பெறுகிறேன் வேறு தொழில் எதுவும் செய்யவில்லை.

2. எதிரி எந்த தேதியில் எத்தனை மணிக்கு பணத்திற்காக என்னை தொடர்பு கொண்டார் என்றால் 10.09.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் எதிரி பணம் கேட்டார். எதிரி என்ன தேவைக்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால் குடும்ப தேவைக்காகவும் சில்லறை கடன் அடைப்பதற்கும் என்னிடம் பணம் கேட்டார். எனது புகார் மனுவில் குடும்ப செலவிற்கும் அவளுடைய முந்தைய கடனை அடைப்பதற்காகவும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பெண்மணி யாரும் கிடையாது எதிர்மனுதாரரின் கடன் தான். எதிரிக்கு எத்தனை குழந்தைகள் அவர்கள் பெயர் என்னவென்றால் அவருக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது பெயர் தெரியாது. எதிரி எனது வீட்டிற்கு வந்தபோது வீட்டில் நானும் எனது மனைவியும் இருந்தோம். எதிரிக்கு 10.09.2023ம் தேதி காலை 11.00 மணிக்கு எனது வீட்டில் வைத்து பணம் கொடுத்தேன் அப்போது நான் எனது மனைவி ஆகியோர் தான் இருந்தோம். எதிரிக்கு நான் பணம் கொடுக்கும்போது எதிரி என்னென்ன ஆவணங்கள் கொடுத்தார் என்றால் ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை. பெரிய தொகை எதிரிக்கு கொடுக்கும் போது அவரிடம் ஆவணம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரி கடன் வாங்க வரும்போது அவரது குடும்ப உறுப்பினரை அழைத்து வரசொன்னேனா என்றால் சொல்லவில்லை. அப்படி என்றால் எதிரி அந்த அளவுக்கு நம்பிக்கை உடையவர் என்பதால் ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

3. உண்மையிலேயே நான் எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் ஆவணங்கள் எழுதி வாங்கியிருப்பேன் என்றும் நான் எழுதி வாங்காததால் நான் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் நான் நம்பிக்கையின் பேரில் பணம் கொடுத்தேன். எனது புகார் மனுவில் 2 வது பக்கத்தில் மனுதாரரான நான் பிரதிவாதியை அணுகியதால் அவளின் கடனை கொடுக்க சொல்லி வலியுறுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் கொடுத்த கடனை திருப்பி கேட்டேன். வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை எண், தேதி எந்த வங்கி என்ற விபரம் தெரியுமா என்றால் உசிலம்பட்டி கனரா வங்கி , காசோலை எண் 169183 , தேதி 06.02.2024 ஆகும். நான் எந்த தேதி வசூலுக்கு செலுத்தினேன் என்றால் 13.02.2024 ம் தேதி செலுத்தினேன். எதிரி காசோலை கொடுக்கும்போதே ஒருவாரம் கழித்து தாக்கல் செய்ய கூறினார். நான் எதிரிக்கு பணத்தை ரொக்கமாக கொடுத்தேன். எதிரிக்கு மொத்தம் 500 ரூபாய் நோட்டாக 10 கட்டுகள் கொடுத்தேன். எதிரிக்கு 26.02.2024ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன். எதிரி அவரது பதில்

அறிவிப்பில் என்ன சொல்லியிருந்தார் என்றால் எதிரி 1 லட்சம் வாங்கியதாகவும் அதற்கு மாதம் பத்தாயிரம் ரூபாய் வட்டி செலுத்தி கடனை தீர்த்துவிட்டதாக பொய்யாக சொல்லி இருந்தார். அந்த கடனுக்காக பெறப்பட்ட பூர்த்திசெய்யப்படாத காசோலை நான் திருப்பி தரவில்லை என்று பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு அவர் சொல்லியிருந்தார் அதுபொய்யாகும். டிசம்பர் மாதம் எதிரியை எங்கு வைத்து எத்தனை மணிக்கு சந்தித்தேன் என்றால்தேதி ஞாபகமில்லை 3வது வாரத்தில் ஒருநாள் மாலை 4.30 முதல் 5.00 மணிக்கு சந்தித்தேன். அப்போது அந்த இடத்தில் யார் இருந்தார்கள் என்றால் நான் எதிரியின் வீட்டிற்கு சென்றிருந்தேன் அவர் மற்றும் அவரது மனைவி, குழந்தை இருந்தார்கள்.

4. எதிரி காசோலை எனது பெயரிட்டு, அவரது கையெழுத்திட்டு கொடுத்தார் என்று சொல்லி உள்ளேன் ஆனால் தேதி குறிப்பிட்டு கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி எத்தனை மணிக்கு எந்த இடத்தில் வைத்து காசோலை வழங்கினார் என்றால் 06.02.2024 ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நான் எதிரியின் வீட்டிற்கு சென்றேன் அவர் காசோலையில் அனைத்து விபரங்களையும் நிரப்பி கையில் வைத்திருந்தார். எனது நிரூபண வாக்குமூலத்திலும் , வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் எதிரி எனது முன்பு காசோலையை நிரப்பி கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் வீட்டிற்கு சென்றபோது எதிரி எனது முன்னிலையில் காசோலையை நிரப்பி கொடுத்தார். மேற்படி காசோலையை நான் பூர்த்தி செய்தபின்பு எதிரி கையெழுத்திட்டாரா அல்லது எதிரி கையெழுத்திட்ட பின்பு நான் பூர்த்தி செய்தேனா என்றால் எதிரி தான் அனைத்து விபரங்களையும் நிரப்பி கொடுத்தார். காசோலையில் கையெழுத் மற்றும் இதர விபரங்கள் வெவ்வேறு மையினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் எதிரி தான் அவ்வாறு கொடுத்தார். மேற்படி ஆவணத்தை கையெழுத்து நிபுணரிடம் அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. எதிரி எங்கு வைத்து வட்டி பணத்தை கொடுத்தார் என்றால் நான் வட்டிக்கு கொடுக்கவில்லை பழக்க வழக்க அடிப்படையில் பணம் கொடுத்தேன்.

5. எதிரிக்கு நான் பணம் கொடுத்த விபரம் எனது மனைவி தெரியும் என்றால் சரிதான். எனது மனைவியை விசாரித்தால் அனைத்து விபரமும் தெரியும் என்றால் சரிதான். எனக்கு இவ்வளவு தொகை எப்படி கிடைத்தது என்றால் 2021 ம் ஆண்டு அக்டோபர் 31ம் தேதி எனது மகனுக்கு திருமணம் நடந்தது திருமணத்திற்கு வந்த மொய் பணம் வைத்திருந்தேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா

என்றால் இல்லை எனக்கு அந்த வரம்பை தாண்டினால் தானாக பிடித்தம் செய்யப்படும். நான் வருமான வரி கணக்கு தனியாக தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. அரசாங்கத்தின் சட்ட விதிமுறைகளின்படி 2 லட்சம் அல்லது அதற்கு மேல் எனில் ரொக்கமாக பணம் செய்ய கூடாது எனவும் நான் எதற்காக எதிரிக்கு ரொக்கமாக பணம் கொடுத்தேன் என்றால் பழக்க வழக்க அடிப்படையில் கொடுத்தேன். நான் எதிரிக்கு யார் முன்னிலையில் பணம் கொடுத்தேன் என்ற விபரத்தை எனது புகாரிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ, அறிவிப்பிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு எதிரி பெற்ற கடனை தீர்வு செய்த பின்பு நான் திருப்பி தராமல் மேற்படி காசோலையை தற்போது பூர்த்தி செய்து இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கண்ட கடன் தொகை எதிரி வழக்கில் சொல்லப்பட்ட தொகை எக்காலத்திலும் பெறாத காரணத்தால் எனக்கு திருப்பி செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனக்கும் பழக்க வழக்கம் முடிந்துவிட்டதால் எதிரியை பழிவாங்க வேண்டும் எண்ணத்துடன் இந்த காசோலை வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

S.d./Potharaj
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.